**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**<u>காணொளிகாட்சி விசாரணை (Video Conference)</u>**
**<u>ஆணை நாள்: 04.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

……………

**<u>வழக்கு எண். CP137/F/2025</u>**

திரு. K.செல்வம் ... மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம் (மதுரை) லிட்
விருதுநகர் மண்டலம்,
6/377, சின்னமூப்பன்பட்டி,
மதுரை ரோடு விருதுநகர் - 626001 ... பொது அதிகார அமைப்பு

******

**<u>ஆணை</u>**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.K.செல்வம் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.G.கண்ணன், பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட், விருதுநகர் மண்டலம், 6/377, சின்னமூப்பன்பட்டி, மதுரை ரோடு விருதுநகர் ஆகியோர் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் 16.11.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திரு. K. செல்வம், ஓட்டுநர் பணி எண் 30515 விருதுநகர் மண்டலம் இராஜபாளையம் கிளை I இருந்து வத்திராயிருப்பு கிளைக்கு எந்த அடிப்படையில் பணியிட மாற்றம் செய்யப்பட்டது என்பதற்கான விபரம், பரிந்துரை செய்த அதிகாரி

அவர்களின் பெயர், பதவி, பணி எண், பரிந்துரை செய்ததற்கான காரணம், பணியிட மாறுதல் செய்து உத்தரவு பிறப்பித்த அதிகாரியின் பெயர், பதவி, பணி எண், பணிப்பதிவேட்டின் நகல் பணியில் சேர்ந்த நாள் முதல் நாளது தேதி வரை என்பது போன்ற தகவல்களை 9 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 27.11.2024 நாளிட்ட கடிதம் வாயிலா மனுதாரரை 60 பக்கங்களுக்கு ஒரு பக்கத்திற்கு ரூ.2.00 வீதம் மற்றும் தபால் செலவு ரூ.50/- உட்பட மொத்தம் ரூ.170/- விருதுநகர் மண்டல தலைமை அலுவலகத்தில் ரொக்கமாகவோ அல்லது விருதுநகரில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் வங்கி காசோலை / வரைவேலலை மூலமாகவோ செலுத்துமாறு தெரிவித்துள்ளார். மனுதாரரும் ரூ.170/-க்கு உரிய கட்டணத்தை செலுத்தி விட்டு உரிய ரசீது வழங்கி தான் கோரியுள்ள அனைத்து தகவல்களையும் வழங்குமாறு 05.12.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 19.12.2024 நாளிட்ட பிரிவு 19(**1)**-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் பொதுத் தகவல் அலுவலர் 18.12.2024 நாளிட்டு 21.12.2024 நாளன்று ஒப்பமிட்டு மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களை வழங்கியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் 07.01.2025 நாளிட்ட பிரிவு **18(1)**இன் கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய காணொளி விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் உரிய காலத்திற்குள் தகவல் வழங்காமல் கால தாமதமாக வழங்கியுள்ளதாகவும், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் தபால் செலவுக்கு பணம் செலுத்த வேண்டும் என்று சொல்லப்படாததால், பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் தன்னிடம் தபால் செலவுக்காக பெற்ற ரூபாய் 50/-ஐ திரும்ப தன்னிடம் வழங்கிடவும் பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள ஏற்கனவே கடித எண் விருது/உதஅ/அ3/24-11-18/2024, 18.12.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாகவும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரரிடம் தபால் செலவுக்காக பெற்ற ரூபாய் 50/-ஐ அப்போதைய பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று திரும்ப வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. மேலும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் உரிய காலத்திற்குள் தகவல் வழங்காமல் கால தாமதமாக தகவல் வழங்கியுள்ளதாகவும், தபால் செலவுக்காக பெற்ற ரூபாய் 50/-ஐ மனுதாரரிடமிருந்து பெற்று உள்ளது தெரிய வருகிறது. இச்செயல், தகவல் பெறும் உரிமைச் சட்டத்திற்கு புறம்பானது. ஆணையம் இதனை கண்டிக்கிறது. எனவே, இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் வழங்கி கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காமல், தபால் செலவுக்காக ரூபாய் 50/-ஐ ஏன் மனுதாரரிடமிருந்து பெற்றார்*** என்பதற்காக ***திரு.P.ரவிசந்திரன், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச்***

*சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது. மேலும், தபால் செலவுக்காக மனுதாரரிடமிருந்து பெற்ற ரூ.50/- மனுதாரருக்கு திரும்பச் செலுத்தி விட்டு, அதற்கான பற்றுச் சீட்டினை இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க இவ்வாணையம் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், திரு.P.ரவிசந்திரன் அவர்களுக்கு உத்தரவிடுகிறது.*

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய ஆவண நகல்களுடன் <u>“தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP137/F/2025</u>**

**<u>பெறுநர்</u>**

பொது தகவல் அலுவலர்
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்
விருதுநகர் மண்டலம், 6/377, சின்னமூப்பன்பட்டி,
மதுரை ரோடு விருதுநகர் - 626001

**<u>மனுதாரர்</u>**

திரு. K.செல்வம்,
2/11, கிருஷ்ணன் கோவில் தெரு
நல்லமங்கலம், பொட்டல்பட்டி அஞ்சல்
இராஜபாளையம் தாலுக்கா
விருதுநகர் மாவட்டம் - 626111,

Copy to: Judgement File/ Spare.
JE / PA 05.06.2025.